கிழக்கு நுவரகம்பலாத்த பிரதேச சபை - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கிழக்கு நுவரகம்பலாத்த பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கிழக்கு நுவரகம்பலாத்த பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் நடைமுறையல்லா முதலீட்டின் கீழ் 03 நிலையான வைப்புக்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 8,481,087 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி மீதி ரூபா 8,543,341 ஆனமையால் ரூபா 62,254 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

(ஆ)	சபைக்குரிய 13 கட்டிடங்களில் நிர்மாணிக்கப்பட்ட 13 காணிக் கூறுகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	மேற்படி	சபைக்குரிய சகல ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(இ)	காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப்பாய்ச்சலின் கீழ் ஏனைய நடைமுறைச் சொத்துக்களில் ரூபா 4,483,393 ஆக இருந்த போதிலும் 12 மற்றும் 13 குறிப்புக்களின் பிரகாரம் சொத்துக்கள் அதிகரிப்பு ரூபா 78,802 ஆனமையால் ரூபா 4,404,591 காசுப்பாய்ச்சல் கூற்றில் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	மேற்படி	சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(ஈ)	நிலையான சொத்து பட்டோலையில் ரூபா 200,000 பெறுமதியுடன் மகாபாலாடிக் குளம் 09 வாய்க்கால் வீதி பொதுக் கிணறு அமைந்துள்ள காணி இரு தடவை குறிப்பிடப்பட்டதன் காரணமாக காணிகளின் பெறுமதி ரூபா 200,000 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	மேற்படி	சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பரீட்சை மீதியின் நிலையான வைப்பு காசு மீதி ரூபா 8,481,087 ஆக சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 10,333,087 ஆனமையால் ரூபா 1,852,000 வேறுபாடு காணப்பட்டது.	2025 ஆம் ஆண்டில் சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நேரொத்த அறிக்கை பட்டோலைகளுடன் இணக்கம் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் நிலையான வைப்பில் கிடைக்க வேண்டிய வட்டி ரூபா 1,049,678 ஆக இருந்த போதிலும் பரீட்சை மீதியின் பிரகாரம் ரூபா 560,438 ஆனமையால் ரூபா 489,240 இணக்கமின்மை காணப்பட்டது.	பேரேட்டில் பதியும் போது ஏற்பட்ட தவறாகும்.	மேற்படி

1.7 இணங்காமைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமானங்களுடனான தொடர்பு	இணக்கமின்மை	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை			
(i)	நிதிப்பிரமாணம் 756	2024 ஆம் ஆண்டில் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	2023 ஆம் ஆண்டில் பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் முடிவடைந்த உடன் 2024 இன் பொருள் மெய்மையாய்வை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	நிதிப்பிரமாணம் 1646	பிரயாணங்கள் தொடர்பான மாதாந்தப் பொழிப்பின் மூலப் பிரதியுடன் அந்த அந்த மாதத்தின் நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் அடுத்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்ப வேண்டும் என காண்பிக்கப்பட்ட போதிலும் 2024 ஆம் ஆண்டிற்காக சபைக்குரிய 10 வாகனங்களுக்கு உரிய நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	விரைவாக கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,537,390 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,079,423 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

		2024				2023			
	வருமானமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
i.	ஆதன வரியும் வரியும்	2,450,000	2,432,000	3,003,923	18,000	3,016,000	2,429,497	2,472,847	826,770
ii.	வாடகை	7,091,785	4,087,898	3,681,898	1,642,158	14,594,690	3,675,830	3,640,971	1,431,836
iii.	அனுமதிப் பத்திரக் கட்டணம்	1,480,000	1,838,683	1,838,683	504,231	1,450,000	1,503,966	1,445,767	1,176,263
iv.	ஏனைய வருமானம்	31,858,000	39,844,666	39,844,666	99,807,811	38,240,400	34,812,231	35,308,195	44,417,423
	மொத்தம்	42,879,785	48,203,247	48,369,170	101,972,200	57,301,090	42,421,524	42,867,780	47,852,292

2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	**வீதவரியும் வரியும்**		
(i)	1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 139(1) பிரிவின் பிரகாரம் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களை இனங்கண்டு ஆதனவரியை விதிப்பதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	2026 ஆம் ஆண்டு வரை ஆதனவரி விதிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.	ஆதனவரி விதித்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	2017 முதல் 2023 வரையான காலத்தில் இருந்து	நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை	நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு

	கொண்டுவரப்படுகின்ற மீளாய்வாண்டின் சனவரி 01 இல் உள்ளவாறான நிலைய நிலுவை வாடகை ரூபா 1,227,588 இல் 93 சதவீதமான ரூபா 1,137,571 மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்க வில்லை.	எடுக்கப்படும்.	நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii)	மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவைக் கேள்வி வாடகை ரூபா 75,831 ஆண்டின் இறுதி வரையிலும் அறவிடப் பட்டிருக்கவில்லை.	மேற்படி	மேற்படி

(ஆ) ஏனைய வருமானம்

(i)	2024 சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட நிலுவை அறிவித்தல் பதாதைக் கட்டணம் ரூபா 1,103,852 இல் ரூபா 448,081 தொகை 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.	நிலுவை அறிவித்தல் பதாதை கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகாரத் தரப்பினரிடம் இருந்தும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 6,797,795 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 92,960,648 அறவிடப்பட்டிருக்கவில்லை.	நீதிமன்றத் தண்டப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
பிரதேச சபைகள் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உபவிதிகள் விதிக்க வேண்டியிருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த விடயங்களுக்காக உபவிதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை.	பிரதேச சபைகளை ஸ்தாபித்தல் மற்றும் மாகாண சபைகள் ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் மிகுதியாக உள்ள உபவிதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உபவிதிகளை விதித்துக் கொள்வற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 இனங்காணப்பட்ட நட்டம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் பொருள் மெய்மையாவின் போது வெளிப்படுத்தப்பட்ட சிராவஸ்திபுர நூலகத்தில் காணப்பட்ட தொலைந்து போன 169 புத்தகங்களின் பெறுமதி ரூபா 51,477 இனை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பரிந்துரையின் பிரகாரம் தொலைந்து போன புத்தகங்கள் தொடர்பான நடவடிக்கை எடுக்கப்படும்.	நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2019 ஆம் ஆண்டு முதல் 2021 இற்கு இடையிலான காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற வேலைப் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 13 வேலைகளுக்கு உரிய கூட்டுப்பெறுமதி ரூபா 1,359,612 கையால் நிறுவத்தி வைத்த பணத்தை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	வேலைகளின் செயல் முன்னேற்றத்தை பரீட்சித்து நிறுத்தி வைத்தல் பணத்தை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வேலைகளின் குறைபாடுகளைப் பரீட்சித்து நிறுத்தி வைத்தல் பணத்தை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	பிரதேச சபைக்குரிய கூட்டுப்பெறுமதி ரூபா 1,981,796,301 ஆன 07 கணக்கு மீதிகளுக்காக போதியளவான சான்றுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	எழுத்து மூல சான்றுகளை கண்டறிந்து மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.	உறுதிப்படுத்துகின்ற கணக்காய்வு சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
(இ)	பல வருட காலம் முதல் தொடர்ச்சியாக அறவிடப்படாமல் காணப்படுகின்ற கூட்டுப்பெறுமதி ரூபா 73,490 ஆன 07 ஊழியர் கடன் மீதிகளை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	விரைவாக அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	நிலுவை ஊழியர் கடனை அறவிவடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
சபையின் வருமானம் உழைக்கும் நோக்கத்திற்காக 05 வருட காலத்திற்கு முன்னர் கைப்பற்றப்பட்ட ரூபா 220,000 ஆன கொங்கிரீட் கல் மெசின் மற்றும் ரூபா 1,038,989 செலவில் நிர்மாணிக்கப்பட்ட வாகன சேவிஸ் மேற்கொள்கின்ற நிலையம் என்பன 04 வருடங்கள் அளவிலான காலம் முதல் விளைவற்றுக் காணப்பட்டது.	கொங்கிரீட் கல் உற்பத்தி நிறுவனம் உரிய பெறுகை செயற்பாடுகளை ஏற்று அங்கீகரித்து வாடகைக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் வாகன சேவை நிலையம் அலுவலகத்தின் பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களை கழுவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் வாகன சேவிஸ் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு ஊழியர்கள் வெற்றிடமாக உள்ளது.	விளைவற்றுக் காணப்படுகின்ற சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.5 மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் இரண்டாம் நிலையில் 04 பதவிகளில் 05 வெற்றிடங்களும், ஆரம்ப நிலையில் 01 பதவியில் ஒரு பதவியின் மிகையும் காணப்பட்டது.	கருத்து தெரிவிக்கப்பட வில்லை.	அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக் கட்டமைப்பில் ஆட்சேர்ப்பை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(2) உப பிரிவின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வில்லை.	எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படம்.	தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.2 சுற்றாடல் பிரச்சனைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
பிரதேச சபையின் மூலம் பொது மக்களின் நலன்புரி மற்றும் நலன்வாய்ந்த தேவைகளை நிறைவேற்றுகின்ற பிரதான செயற்பாடுகளின் கீழ் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக முன்னுரிமை வழங்க வேண்டியிருந்த போதிலும் சபை அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற உக்காத கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக முறையான திட்ட முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற உக்குகின்ற கழிவுப் பொருட்களை மீள் சுழற்சி செய்வதற்காக மாநகர சபையுடன் ஒன்றிணைந்து கீரிக்குளம் கழிவுப் பொருள் தளத்தை பயன்படுத்துவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	கழிவுப் பொருள் முகாமைத்துவம் முறையாக நடைமுறைப்படுத்தல் வேண்டும்.